அவர்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. து. இராசரத்தினம் ஆவார்.

இது குறித்த தீர்மானத்தை மொழியும்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''இன்று (28–7–1980) பகல் சுமார் 11-40 மணிக்கு சட்டமன்றப பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்க்க உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை பழையவண்ணாரப்பேட்டை இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை, 21-வது எண் வீட்டிலிருக்கும் திரு. ராஜு என்பவரின் மகன் ஆர்.பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்; பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்துக் கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், வரதராஜப்பெருமாள் செட்டித் தெருவில், 5-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. பாலுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மாண்க்கின்றது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, முன்பு இந்தத் தண்டனை 3 நாள் என்று குறைக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல இன்றும் அந்தத் தண்டனை காலத்தை 3 நாளாகக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: தண்டனையை 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று நானும் எனது கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜுலை 28]

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவர்களுக்கு தண்டனை கொடுப்பது சபாநாயகர் அவர்களுடைய பொறுப்பு. நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை.

* * * * *

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு., சங்கரய்யா அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். (கூச்சல்-குழப்பம்)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, திரு. சங்கரய்யா அவர்களுடைய கோரிக்கைக்கிணங்க என்று அமைச்சர் சொல்கிறார். மதிப்பிற்குரிய திரு. சங்கரய்யா அவர்களுடைய பெயரைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே போன்று எங்கள் பக்கத்திலே இருந்தும் தண்டனைக் காலத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்கிறோம்.

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் துண்டறிக்கை வீசியது இந்தப் பேரவையை அவமதிக்கும் செயல். இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கும் செயல்....(கூச்சல்-குழப்பம்).

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்களின் பெயரைச் சொல்வதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் தண்டனை குறைக்கப்பெற வேண்டும் என்று நாங்களும் தான் சொல்லியிருக்கிறோம். ஆகவே பொதுவாகவே சொல்லட்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி விடலாம். பிரச்னை இல்லை.

மாண்புமிகு திரு.கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

"தீர்மானத்தில் உள்ள '7 நாட்கள் என்பது 3 நாட்கள்' என்பதாகத் திருத்தப் பெற வேண்டும்".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "இன்று 28–7–1980 பகல் சுமார் 11-40 மணிக்கு சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை, பழைய வண்ணாரப் பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை 21வது எண் வீட்டிலிருக்கும் திரு ராஜூ என்பவரின் மகன் ஆர். பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், வரதராஜப்பெருமாள் செட்டித்தெருவில் 5ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. பானுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக் கொள்ளும் நபரும்,

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசின் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

* * * * *

6. வரவு-செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

[பிற்பகல் 12-40]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தாக்கல் செய்திருக்கின்ற நீர்ப்பாசன கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்கள் தெரிவிக்க விழைகிறேன். குறிப்பாக, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு, புதிய திட்டங்களை அறிவிப்போம், ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்வோம் என்று சொன்னார்கள். அத்தகைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.